8. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“21-8-2015 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, பேரவை விதி 25(1)-ன் 2-வது காப்புரையின்கீழ், பேரவை 14-9-2015 அன்று மீண்டும் கூட்டப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 14-9-2015 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஐம்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)